

# தலைப்பு: தர்மம்

வழங்கியோர்

(கலிவெண்பா)

அரியது சேவை அழகுறச் செய்தால்
உரியது நேரம் உதித்திடும் நன்மையே
தன்னை ஒறுத்து தருமொரு கல்வியே
நன்மை பயக்கும் நறுமலர் வாசம்

இடர்களை தீர்க்கும் இரங்கிடும் கைகள்
தொடர்வது தானே தினமொரு நன்மையே
அன்னமே இட்டும் அணைத்திடும் வண்ணம்
மின்மினி பூச்சாய் மிளிர்வதும் திண்ணமே
அள்ளிக் கொடுக்கவே ஆனந்தம் தருமொரு
வெள்ளி நிலவாய் வெளிச்சமே கூடும்
தளிர்த்திடும் வாழ்வின் தளர்வினைத் தாங்கி
துளிர்க்கவே வைத்திட துக்கமும் தீர்பார்
தரணியில் தன்னால் தருமொரு தர்மம்
மரணத்தில் கூடம் மதிப்பு.

*சரளா விமலராஜா*
*சுவீஸ்*

விரிந்து பறந்த உலகினில்
வீரியமிக்க மானுடன் செய்த மகிமையே தர்மம்

இல்லாதவனுக்கு
ஈதல்போற்றி சாதலில்லா சாதனை கண்டது தர்மம்

பாடுபட்டுத் தேடியசெல்வம்
பதுக்கிய மனிதன்
கூடுவிட்டு ஆவிபறந்தாலே கொடுக்கக் கிடைக்கா
தர்மம்

கொடுத்துச் சிவந்த
செல்வம் யாவும்
சந்ததி காக்கும்
தர்மச் செயலே

தலைமுறை தாண்டியும்
மங்காப் புகழ் மண்ணி சிறக்க செய்தே
மகிழ்வோம் சீரிய தொண்டு

*கா பெரியசாமி காரைக்குடி*